பொய்யாமொழி

ஆசிரியர்_ம. பாஸ்கரனார்.

18 NOV 1950

Rc. 148/50

செய்யா மொழிக்குந்திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே — செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1	திருவள்ளுவர் ஆண்டு 1981, புரட்டாசி 18 (4—10—50) புதன்கிழமை.	மணி 6

வாழ்க! வையகம் ★ ★ ★ வாழ்க! நல்லறம்

542/4.50.

★

தன்னுயிர் போலே தனக்கழி வென்னும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;

மன்னுயி ரெல்லாங் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;

இன்ன மெய்ஞ் ஞானத்துணிவினை மற்றுங்
கிழ்படுபோர், கொலை, தண்டம்

பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!

★



★

பெருங்கொலை வழியாம் போர்வழி [யிகழ்ந்தாய்;
அதனிலும் திறன்பெரி துடைத்தாம்

அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் [தங்கள்
அறவழி யென்றுநீ யறிந்தாய்;

நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினும் இந்தியா விற்கு

வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்க நல்லறத்தே.

—பாரதி

★

ஜெயங்கொண்டத்தில் அமைந்துள்ள அண்ணலின் உருவச்சிலை.

வார இதழ். ★ விலை அணு 1.

வாழ்த்து செய்திகள்.

எதிர்ப்புவரும் இன்னல்வரும் எனஏங்கா தரமோடு
மதிப்பிற்கே அல்லாமல் வையத்தில்—கொதிக்கின்ற
உள்ளத்தார் குறைநீக்க வருகின்ற கிழமைத்தாளே
வள்ளுவனார் பெயர்கொண்டாய் வாழி!

—"மதிமன்னன்"

ஃ ஃ ஃ

வ. முகமதயாத்பாட்சா,
செயலாளர், திருக்குறள் கழகம்.
உடையார்பாளையம். 16—9—50

அன்புடையீர்!

வணக்கம். தங்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் பொய்யாமொழி என்னும் வாரமலரைக் கண்டு களிப்புற்றேன். தங்களின் அருஞ்சேவைக்கு என் அன்பு கலந்த நன்றி. தங்களின் பத்திரிகை பருவத்தே பெய்யும் மழைபோல் நாட்டிற்கு தேவையான நேரத்தில் வெளிவரும் கருத்திதழ்,

திருக்குறளை திக்கெட்டும் பரப்பவும் திராவிடப் பெருங்குடி மக்களின் சமுதாய, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்திற்கும் பேருதவியாய் திகழ வேண்டுமென்பது என் அவா. அதற்கு மக்களின் பேராதரவும் அனுசரணையும் உங்கள்பாலிருக்கும்.

வாழ்கதிராவிடம்! வாழ்க தமிழ்! வாழ்க பொய்யாமொழி!

ஃ ஃ ஃ

சா. அபிராமசுந்தரம் பிள்ளை
தருமபுர ஆதின நாதசுரவித்வான். 22—10—50

உயர்திரு பாஸ்கரனார் அவர்களுக்கு

அபிராமசுந்திரம் வணக்கம், தங்கள் பொய்யாமொழி வரப்பெற்றேன். இக்காலத்தில் இப்படி ஒரு வாரத்தாள் இருப்பது அவசியமே என்பது எனது நோக்கம். பொய்யாமொழி நீடூழி வாழ்க!

அடியேனாலாவது ஏதாயினும் செய்ய சித்தமாயிருக்கிறேன் என்பதை பொய்யாமொழி ஆசிரியர் அவர்கட்கு மிகப்பணிவாய் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வாழ்க பொய்யாமொழி

ஃ ஃ ஃ

A. T. N. ராமசாமி, சென்னை.

தோழர் பொய்யாமொழி ஆசிரியர் அவர்களுக்கு தாங்கள் அன்புடன் அனுப்பிய முதல் இதழ் வரப்பெற்றேன். உலகத்தின் கண்ணே வழங்கும் 1001 மொழிகளில் சிறப்புற்றுவிளங்கும் தமிழ்மொழிக்கு "மலையிட்டவிளக்கென" உலகினுக்கு பல நயங்களை எடுத்துக்காட்டும் திருக்குறளுக்கு ஒப்பானதோர் நூல் இலது என்பது ஆராச்சியாளர் கொண்டதுணிபு; என்பது "வள்ளுவன் தன்னை உலகினிக்கேதந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார் கூற்றால் அறியலாம்.

மெய்ம்மொழி என்று கூறாது "பொய்யாமொழி என்று குறளுக்குபெயர் அமைந்ததில் பொருள் "ஆழமுடைத்து" மெய்யாமொழி என்றால் மற்றொருகாலத்தில் அஃது பொய்யாமொழியாகிவிடும் உதாரணமாக "கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான்" என்ற கம்பர்வாக்கு பொதுவுடமை பூத்து "கடன் நிவாரணச் சட்டம்" வந்ததும் அதன் கடன் உவமை அவ்வளவு சிறப்பாகஇல்லை. கடன் கொடுத்தார் நெஞ்சம்போல் கலங்கினான்என்று மாற்றவேண்டியதாயிற்று. சங்கப் புலவரில் ஒருவராகிய முடிநாகராயர் என்பார் செய்த செய்யுள்களில் குருநாட்டில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் பாரதயுத்தம் நடந்தகாலையில் தமிழ்நாட்டு சோழவேந்தர்கள், அவர்களுக்கு இங்கிருந்து உணவுப் பொருள் கொண்டுபோய் சோறுசமைத்து போட்டதாகக் கூறி தமிழ்நாட்டின் "சோழவளநாடு சோறுடைத்து" என்றும் சிறப்பைவிளக்கி இருக்கிறார். ஆனால் தற்போது மேற்படிகவியின் பொருள் இக்காலத்தில் பொய்த்துப் போய்விட்டது. ஏன் காவிரியின் தண்ணீரை மைசூர் கிருஷ்ணராஜசாகரம் தேக்கிவிட்டது இவ்வாண்டு சோழவளநாடு சோர்வுடைத்து என்னும் நிலைஏற்பட்டு ஷை குருநாட்டைச்சேர்ந்தடில்லிக்கு இங்கிருந்துஉணவுப் பஞ்சம் என்று அபயக்குரல்கொடுத்து கெஞ்சவேண்டியதாகிவிட்டது

இப்படியே எந்த புலவருடைய மெய்மொழிகளும் ஒருகாலத்தே பொய்த்துவிடுகிறது நமது வள்ளுவனார் வாக்கோ எக்காலத்தும் பொய்யாமொழியாகவே விளங்குகிறது. ஏன் அதனுடை உரையை காலத்துக்கேற்ப மாற்றிக்கொண்டால் போதும் மூலத்தை மாற்ற வேண்டியதேஇல்லை. இப்படி எக்காலத்தும் மாறுபாடற்று காலத்துக்கேற்ற பொருள்தரும் ஒப்பற்ற நூல் திருக்குறள், இதனாலன்றோ பொய்யாமொழி என்றுபெயர்பெற்று விளங்கிவருகிறது.

பொய்யாமொழியின் பெயர்கொண்டுநம்நாட்டுக்கு சிறப்பாக நப்சாலுக்காவுக்கு தொண்டு செய்யும்வார இதழ் வெளிவருவது மக்களுக்கு அறிவுக்கண் திறந்து வைத்து அரசியலில் நன்மைபெற அனைவருக்கும் நன்மை செய்வதாகும்.

இவ்வரிய தொண்டினை ஏற்றுக்கொண்டுள்ள ஆசிரியருக்கு நமது நன்றி உரித்தாகுக!

ஃ ஃ ஃ

M. புண்ணியமூர்த்தி
ஆசிரியர், தி.மா. நா. க. துவக்கபள்ளி
எரவாங்குடி,

வணக்கம். சூரியனது ஒளியைக்கண்ட இருளைப் போல இப்பத்திரிகையின் செய்திகளால் மக்களைச் சூழ்ந்திருக்கும் அறியாமை மூடப்பழக்கவழக்கங்கள் முதலியன நீங்கும் என நம்புகிறேன்.

இன்று தென்னாட்டிடையே சீர்திருத்தமுன்னேற்ற நோக்கத்தை புகுத்தி மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படி நிலவிவருகின்ற ஒருசில செய்தித் தாள்

[தொடர்ச்சி 7 பக்கம்பார்க்க]

22

குற்றமா?!

அ. க. கே. இரசூல்.

திண்ணையில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தார் நடேச முதலியார் தன்னை மறந்து. (கடலிலே கரைகாணாது தவிப்பவன் நிலைபோல்) கரைகாணாது தவிப்பவன் கண்ணிற்கு ஒரு தீவுதென்பட்டால் எவ்வளவு மகிழ்ச்சி கொள்வானோ அதுபோல்; ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்த முதலியாருக்கு குறுக்குவழி ஒன்று தென்பட்டது குறுகியமனப்பான்மையுள்ள அவர் உள்ளத்திலே 'அதுதான் சரி!' என்று எழுந்து நடந்தார் அர்ச்சகரை நோக்கி...

அர்ச்சகரிடம் சற்று பேசிக்கொண்டிருந்துவிட்டு வீடு திரும்பினார் முதலியார். அர்ச்சகரும் 'இதுதான் தருணம், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பதுபோல் இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடவில்லை. வெகுநாட்களாக தன் மனதிலே, தீட்டியிருந்த திட்டம் நிறைவேறபோகிறதே! என்ற ஆனந்தத்தில் அர்ச்சனைகள் எல்லாம் மிக ஆடம்பரமாக செய்யப்பட்டது, பிறகு முன் ஏற்பாட்டின்படி அம்பாளின் ஆலயத்தில் அடைக்கப்பட்டாள் கமலா.

"அம்பா, அபயம்...! அபயம்...!! தாய் தந்தையை இழந்த அனாதை நான் உன் கருணை இன்றி வேறு யார் என்னை காப்பாற்றுவார்கள்...? தாயே ! பரமேஸ்வரி !! பராசக்தி !!! நான் இந்த அர்ச்சகனுக்கு பலியாவது உனக்கு சம்மதமா...? தாய் தந்தை இழந்து தனிமையில் தவிக்கும்என்னை காப்பாற்று தாயே! தாயே...!!" என்று கதறிக்கொண்டே அம்பாளின் திருவடியில் வீழ்ந்தாள்.

சற்று நேரம் கழித்து மயக்கம் தெளிவுற்றெழுந்தாள். தன்னை நெருங்கி வரும் ஒரு பிரகாசத்தைக்கண்டு அச்சமுற்றாள்; என்னமோ ஏதோவென கலங்கினாள். உற்று கவனித்தாள்; வருவது தன் காதலன் மோகன் என்பதையறிந்து மோகன்! என்றுஓடி கட்டி அணைத்துக் கொண்டாள் மோகனை. மோகன் தன் கையிலிருந்த விளக்கை நழுவவிட்டு விட்டு அவளை அணைத்தபடியே, "கமலா! ஏன் இங்கு வந்தாய்? என்று கேட்டான். கமலா நடந்தவற்றை யாவையும் கூறிமுடித்தாள். சரி, இரு வருகிறேன்—என்று சொல்லிவிட்டு, பராசக்தியின் கழுத்திலிருந்த வைர அட்டிகையை கழற்றினான். வேண்டாம்...! வேண்டாம்...!! அதை கழட்டாதீர்கள் !! பிரிந்திருந்த நம்மை ஒன்றுசேர்த்த அன்னை பராசக்தியின் கழுத்திலிருப்பதை கழற்றவேண்டாம்!—என்றாள் கமலா.

கமலா! அஞ்சாதே...! எந்த பராசக்தியால் நம் இருவரும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்ததோ! அந்த பராசக்தி அணிந்திருந்த இந்த வைர அட்டிகை, நம் இருவர் வாழ்க்கைக்கும் வழிகாட்டியாக இருக்கட்டும் நட.

ஃ ஃ ஃ

கள்ளத்தனம்! சற்றும் கலக்கம் இல்லாமல் செய்த கள்ளத்தனம்...!! அம்பாளின் ஆலயத்திலிருந்து முதலியாரின் மனைவியை, நள்ளிரவிலே! கள்ளத்தனமாக கடத்திச்சென்றிருக்கின்றான் கள்ளன் என்றார் வக்கீல். முதலியாரின் மனைவி நள்ளிரவிலே ஆலயத்தில் இருக்க வேண்டிய அவசியம்? என்றுகேட்டார் நீதிபதி. குழந்தை இல்லா குறைநீர்க்க அம்பாளுக்கு அர்ச்சனைசெய்தார் முதலியார். அதனால்; முதலியாரின் மனைவி ஆலயத்தில் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றார் வக்கீல் முதலியாரின் மனைவியை நீர் அழைத்துச்சென்றது உண்மைதானே? என்று கேட்டார் நீதிபதி. வக்கீல் குறிக்கிட்டு, ஆம்! இருபத்தைந்துபவுன் நகையுடன் கடத்திச் சென்றிக்கிறான், கள்ளன்! உஸ். உம்மைக்கேட்கவில்லை. என்றார் நீதிபதி நான்ஏன்; அவர் மனைவியை அழைத்துக் கொண்டு போகிறேன்...? அவர் மனைவியை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே: எமதருமன் அழைத்துக்கொண்டு போய்விட்டானே...! என்றான் மோகன். வேடிக்கையாக இங்கு பேசக்கூடாது. என்றார் நீதிபதி.

வேடிக்கை அல்ல, உண்மை! சொல்லுகிறேன் கேளுங்கள் ..! சுமார் மூன்று ஆண்டுகளுக்குமுன், முதலியாரின் மனைவி இறந்துவிட்டாள். இறந்த ஒரு மாதத்திற்குள் மகளைப்போல்வளர்த்த கமலாவை மனைவி ஆக்கிக்கொள்ள எண்ணினார். இதற்கேற்ப,ஏற்பாடுகளும் செய்தார்—இத்திருமணம் தடைபடவேண்டுமென்று, கமலாமுதல், ஊரில் பொதுமக்கள், எத்தனையோபேர் எடுத்துக்கூறியும், அதற்கு அவர் இணங்கியதாக தெரியவில்லை. ஒருவாறு திருமணமும் நடந்தேறியது—திருமணம் நடந்தது சிலமாதங்கள் கழித்து, சாந்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடந்தன. ஆனால்! கமலா அதற்கு இணங்கவில்லை. "குழந்தையில்லையே—என்றுதானே; இந்தவயதான காலத்தில் கல்யாணம் செய்துகொண்டோம்; என் இஷ்ட இன்பத்திற்கு இணங்க மறுக்கிறாளே!" என்றஏக்கம் முதலியார் உள்ளத்தை சூழ்ந்துகொண்டது, இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்தார் அதற்கு; அன்னையின் அருளை பெற, அர்ச்சகர் உதவியை நாடினார்—அர்ச்சகர் அநேக நாட்களாக நாடி இருந்தகாரியம் கைகூடப்போகிறதே! என்று, வாய்த்த சந்தர்ப்பத்தை நழுவவிடவில்லை. நடந்தது ஆர்பாட்டமான அர்ச்சனை பணக்காரர்களின் அர்ச்சனை என்றால் கேட்கவாவேண்டும். அக்கம்பக்கத்தில் உள்ளோர் பழிப்பார்களே! என்றெண்ணி, குழந்தை இல்லாகுறை, என்று பறைசாற்றினார்கள், முதலியாரும் அர்ச்சகரும் அர்ச்சனை, ஆராதனைகள் எல்லாம் ஒரு வழியாக நடந்தேறியது முன்கூட்டிய திட்டப்படி: கமலா அன்னையின் ஆலயத்திலே அடைக்கப்பட்டாள். முதலியார் வீடு திரும்பினார்; பாவம்! செய்வதுசரியா? தப்பா? என்றுஉணராத உள்ளங்கொண்டவர்—பல வருஷங்கள் தவமிருந்தார் ஒருபழத்திற்காக மகரிஷி, என்பதுபோல் பலநாட்களாக காத்திருந்த கனிகிடைத்து விட்டது. அதை உண்ணவேண்டியதுதான் பாக்கி, ஊர் அடங்கியபிறகுவருவோம்; என்றுஎண்ணி போய் விட்டார் அர்ச்சகர் அவர்திரும்பிவருவதற்குமுன், நுழைந்துவிட்டேன் நான் அன்னையின் ஆலயத்திற்குள். காரணம்...?

[தொடரும்]

பொய்யாமொழி
ஆசிரியர்: ஏ. பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, புரட்டாசி 18 புதன். { மணி 6

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்".

விருப்பமின்மை (அவாவின்மை) உண்மையான ஒழுக்க நெறியில் நிற்பவர் (நீண்டகாலம்) நெடிது வாழ்வார்.

உத்தமர் உதித்த வாரம்.

★

உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள் கி. பி. 1869-ம் ஆண்டில் அக்டோபர் 2-ந்தேதி கத்தியவார் பிரதேசத்தில் போர்பந்தர் என்ற ஊரில் பிறந்தார். காந்தியடிகள் 7-ம் ஆண்டு நிரம்பியதும் பள்ளிக்கு சென்றார். சிறு பிராயத்திலும் உண்மையே பேசிவந்தவர். பெரியவர்களுக்கு கீழ்படிதலுடன் மரியாதை காட்டி நடந்தவர். உடலிருந்தவர்களால் தான் சிறுபிள்ளை பிராயத்தில் கெட்ட பழக்க வழக்கம் கையாண்டு வந்ததை குற்றமெனவுணர்ந்தவுடன் உண்மையை ஒப்புக்கொண்டு தந்தையிடம் மன்னிப்புகோரினார் என்றால் எவ்வளவு நிறைந்த விசாலமனம் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் இன்று ஒவ்வொருவரும் சிந்திந்து ஒழுகற்பாலது அத்தோடுமட்டுமல்லாமல் அஹிம்சையில் பற்றுக்கொண்டு நடவடிக்கையிலும் கையாளத்தலைப்பட்டார் எந்த உயிருள்ளபிராணிக்கும் எவ்விதத் துன்பத்தையும் மனதினால் எண்ணவோ, சொல்லால், செய்கையால் உண்டாக்க ஒருப்படாத நீதியைக் கைக்கொண்டார்

"திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று"

பழிக்குப்பழி செய்யாதிருப்பது பெரியோர் கடமை என்பதை நடப்பில் காட்டிய உத்தமர்.

1888ஆண்டில் இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்கு சென்றார் நமது அண்ணலாம் காந்தியடிகள் அவர்களை பல ஆங்கிலேயர் புலாலுண்ண வற்புறுத்தியும், நமது ராமலிங்கஅடிகள் கூறியவாறு 'காரசாரஞ்சேர் சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை தங்கினேன்' என்று பிறருக்குஅறிவுறுத்தியதை ஒத்தே இங்கிலாந்தில் மரக்கறி உணவுகளின் சுவை எவ்வளவு சீர்கேடாயிருந்தாலும் புலாலுணவை உண்ணாமல் சொல்லை செயலில் காட்டிய சிறந்த செயல் வீரராவர் நமது காந்தியடிகள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

பாரிஸ்டர் படித்து முடித்து டர்பனில் ஒரு வழக்கை நடத்த சென்ற காந்தியடிகளை அன்றய வெள்ளை அதிகாரவர்க்கத்தினர் இந்திய தலைப்பாகையை அணிந்திருந்ததை எடுக்கும்படி கோர்ட்டில் வெள்ளை நீதிபதியால் சொல்ல எடுக்கமறுத்தமைக்காக காந்தியார் கோர்ட்டை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. ஆங்கில உடையுடன் இந்தியத் தலைப்பாகை அணியக்கூடாது என நியாயாதிபதி ஆட்சேபித்தாரம்.

தென்னாப்பிரிக்க மக்கள் வேண்டுகோளுக்கிணங்கி சென்று அங்கு தங்கினார். அங்கே தன் உடைகளை தானும், தன் மனைவி கஸ்தூரிபாய் அவர்களும்துவைக்கவுமாகயிருந்து தன் வேலையை தானே செய்வதில் மகிழ்ச்சி கொண்டவர் நமது காந்தியடிகளாவார். ஒருநாள் ஆதிதிராவிட கிறிஸ்தவரை தன்னுடன் பழகியபோது தன் மனைவி கஸ்தூரிபாய்அவர்கள் வெறுத்தமைக்காக அன்னையை வெளியே போய்விடும்படி சொல்லிவிட்டார். இந்தியாவானால் நான் எங்காவது செல்லக்கூடும் இந்த தென்னாப்ரிகாவில் எங்கே செல்வேனென்றும் தனக்கு அறுவறுப்பு ஏற்பட்டவைதிகபழமையுள்ள தன் எண்ணத்தை காந்தியடிகளிடம் எடுத்துச்சொன்னார். அதைக் கேட்டு பக்குவப்படாத பழமை படிந்த உள்ளக் கருத்தினை கொண்டுள்ள தன் மனைவியை நினைத்து மனம் வருந்தினார். பிறகு பண்படாத உள்ளத்தினர்களின் நிலை யறியாது தாம் கோபித்துக்கொண்டது சரியாயென நினைத்து பல அறிவுரை புகட்டி சமரசம் கண்டார். இந்தியா திரும்புங்கால் நமது காந்தியடிகளுக்கு அளித்த சன்மான சாமான்களை அன்னை கஸ்தூரிபாய்அவர்கள் எடுத்துவர ஆசைப்பட்டாரானாலும் காந்தியடிகள் விரும்பாததோடு பொதுஜனத் தொண்டு செய்பவர்கள் சன்மானங்கள் பெறக்கூடாதென்றும், கொடுத்தவர்களிடமே சாமான்களை திருப்பிக்கொடுத்து விட்டார் என்று நாம் கேள்விப்படும்போது நம்முடைய நெஞ்சம்

அகத்தேநகவில்லையா ஆழ்ந்து சிந்தித்து பாருங்கள். இது மட்டுமா இந்திய ஊழிய சங்கத்தின் தலைவர்களுள் கோபாலகிருஷ்ண கோகலே காந்தியடிகளை சகோதரராய் பாவித்தார். பலர் வக்கீல் தொழில்கள் பொய்சொல்லாமல் நடத்த முடியாது என்ற போதிலும் பொய் சொல்லாமலே வழக்கை நடத்த எண்ணங்கொண்டார். ஆனால் நீண்டநாள் வக்கீல் தொழிலை நடத்தவில்லை.

1906-ல் தெ. ஆ. வில் இந்தியர்களின் தன்மானத்தை குறைக்கும் சட்டம் உண்டாகியதைநீக்க சத்தியாக்கிரகப் போரைத் துவங்கினர். அதில் மற்றவர்களோடு காந்தியடிகளும் சிறை சென்றார் பின்னர் அதில் சமரசம் கண்டார் அச்சமரசம் விரும்பாத பாட்டாளி ஒருவர் காந்தியடிகளை மண்டையில் தடியால் ஓங்கியடித்து மூர்ச்சிக்க செய்தார். அது தெரிந்த பாதிரி நண்பர் காந்தியடிகளுக்கு சிகிச்சை செய்து காப்பாறினர் ஆனால் அந்த பாட்டாளியின்மேல் வழக்கு தொடர்ந்து சிறைக்கனுப்பகாந்தியடிகள் விரும்பவில்லை. அவர்கள் சமரசம் செய்து கொண்டது தவறு என்று கருதியதால் தன்னை தண்டிக்க விரும்பினர்கள் ஆகவே அவர்களை தொந்திரவு செய்யக்கூடாதென கோரினர். மறுபடியும் இந்தியர்களின் கோரிக்கை நிறைவேறாததுகண்டு மறுமுறை பலருடன்சிறைசென்றார் சிறையினின்று வெளிவந்ததும் அவர் சகாக்களுடன் டால்ஸ்டாய் விவசாயப் பண்ணையில் வசித்தனர் அங்கே தச்சுப்பட்டரையும், ஒரு பள்ளிக்கூடமுமிருந்தன. எல்லாரும் செருப்பு தைக்கவும், தச்சுவேலை செய்யவும் கற்றுக்கொண்டனர். அவ்விதம் காந்தியடிகள் பல செருப்புக்களை தானே தைத்து பல நண்பர்களுக்குக் கொடுத்திருக்கிறார். கோகலே அவர்கள் தென்னாப்ரிக்கா ராஜப்பிரதிநிதியான ஹார்டிஞ்சு இவர்களின் முயற்சியால் ஒரு சமரசம் ஏற்பட்டது. இவ்வாறு தென்னாப்ரிகாவில் சேவை செய்தபோது காந்தியடிகளின் பேரன்புக்குரியவர்களுள் நமது தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த வள்ளியம்மை என்பவராவார். காந்தியடிகள் சத்தியாக்கிரகப்போரில் வள்ளியம்மையும் சிறைசென்றார் பதினாறு வயதுகூட நிரம்பாத தமிழ்ச்செல்வியின் மனவுறுதிகண்டு ஆச்சரிப்பட்டார். கொடிய நோய் சிறையிலேயே அவ்வம்மையைபற்றிக்கொண்டது. காந்தியடிகள் சென்று நீ சிறைப்பட்டதற்காகவருந்துகிறாயா என்று கேட்டபோது வள்ளியம்மையார் மகாத்மாஜி எனக்கு வருத்தம் சிறிதுமில்லை என முகமலர்ச்சியுடன் என் அண்ணலே தாய் நாட்டின் நலத்தையும் பெருமையையும் கருதி உயிர்விட நான் கொடுத்துவைக்க வேண்டாமா என்று கூறிய வள்ளியம்மையார் சிறையிலேயே இயற்கையெய்தினர்களாம் அந்த அம்மையார். அதுபோலவே நம் தமிழ் நாட்டில் இரு இளைஞர்கள் நாகப்பனும், நாராயணசாமியும் தென்னாப்பிரிக்கா சிறையில் இயற்கையடைந்தார்கள்

1914-ல் இந்தியா வந்து சபர்மதி ஆசிரமம் தங்கி குருவான கோகுலேயை சந்தித்து தம்வாழ்நாளை தேச சேவையில் கழிக்க தீர்மானித்தார். பின்னர் ஒரு ஆண்டு ஊர் ஊராய் சுற்றிப்பார்த்து பேரறிஞர் கவி ரவீந்திரநாதத் தாகூரின் சாந்திநிகேதனுக்குப்போய் சேர்ந்தார். தாகூர் அவர்களின் மறுமலர்ச்சியின் அரிய சேவையைக் கண்டுமகிழ்ந்தார். சேவை செய்வதில் மகிழ்ச்சி கொண்ட காந்தியடிகள் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்பதை மெய்ப்பிக்க பல ஜனத்திரள் கூடிய இடங்களில் தானே தோட்டிவேலை செய்துகாட்டி கீழ்ஜாதியானே செய்வது என்ற வேலையல்ல, யாம் எந்த வேலையும் செய்யலாம் அதனால் தோட்டிவேலை செய்பவன் தாழ்ந்த ஜாதியான் அல்ல என்பதை மெய்ப்பித்துகாட்டியுள்ள காந்தியடிகள் கொண்ட விரதமும் பின்பற்றுபவர்கள் செய்யவேண்டிய விரதமும் போதித்துணர்த்தியது. சுதேச சாமான்களை கையாளுவது, பயம் என்பதை கனவிலும் ஒதுக்குவது தனக்கென எவ்வித சொத்துக்களையும் சேகரிக்க கூடாது என்பதோடு ஆசிரமவாசிகளுக்கு அரசர்களின் பயமும், ஜனங்களுடைய பயமும், ஜாதிக்கட்டுப்பாட்டின் பயமும் குடும்பத்தின் பயமும், திருடர்களின் பயமும், துஷ்ட மிருகங்களின்பயமும், நீரின்பயமும், நெருப்பின் பயமும் இருக்கக்கூடாது என்பனவாகும். தன்னுடைய உடைத் தேவையை தானே பூர்த்தி செய்துகொள்ளவேண்டுமென்றும், கூடியவரை நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களையே உபயோகிக்க வேண்டுமென்பதிலும் உறுதிகொண்டவர். கெய்ரோ ஜில்லாவில் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டபோது வரி செலுத்தமுடியாத குடியானவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்தார். ஆமதாபாத் ஆலை முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்பட்ட தகராறில் தொழிலாளர்களின் குறைகளை தீர்த்துவைத்தார். வாலிபர்களெல்லாம் ஒழுக்கமுடையவர்களாகவும் சமூகத்தொண்டில் என்றும் மாறாதபற்றுடையவர்களாகவுமிருக்கவேணுமென்றாசைப்பட்டார். நம் தேசத்திலுள்ள சிறுவர்களெல்லாம் ஒற்றுமையாய் ஜாதி மத வித்தியாசமில்லாமலிருக்க வேண்டுமென நினைத்தார் உணவில் பெரும்பாலும் பச்சைக்காய்கறிகள் கீரைகள் நிலக்கடலை பழம் இவைகளையே உணவாகக் கொள்வார் வைணவன் என்பதற்கு அவர்கண்ட கருத்து வைணவன் பொருக்குச் சேவை செய்ய முன் நிற்பவன்; தன்னைப்பற்றி புகழ்ந்துகொள்ளமாட்டான் எல்லாரையும் மதித்து நடந்து கொள்வான். ஒருவரையும் இகழ்ந்து பேசான், அவன் மனமும், சொல்லும், செய்கையும் பரிசுத்தமானவை பேராசை மோசக்கருத்து கோபம் இவையொன்றுமில்லாதவனே உண்மை வைணவன் என்பதே அவருடைய சிறந்த முடிவு. ஏழைகள் யாவரும் சிறந்து விளங்கவேண்டுமென்பதே அவருடைய அவா கிராம ஜனங்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் இணையற்ற சேவையைச்செய்து வந்தார் இந்துமதத்திற்குள்ளாகவேயிருந்து அதை சீர்திருத்தி பக்குவப்படுத்தி ஜாதிபேதக் கொடுமையை ஒழிக்க எண்ணிய கர்மவீரர் அவருடைய மதம் வைணவம் என்று சொன்னபோதிலும் மதக்குறி என்றுசொல்லும் (ராமம்) எவ்வித அடையாளமுமிடாமல் நடைமுறையில் மதத்தை மக்களுக்கு பொதுவாக்க நினைத்த உத்தமர் அதுமட்டுமா காந்தியடிகளைப்பற்றி புகழவேண்டுமானல் உண்மையில்,

அஹிம்சையின் சின்னம் ! ஆண்மையின் சிகரம் !
இந்தியாவின் ஜோதி ! ஈடற்ற மாணிக்கம் !
உண்மையுணர்த்திய உத்தமர் !
ஊமைத்தனம் அகற்றிய வீரர் !
எளிமையின் நிழல் ! ஏழைப்பங்காளன் !
ஒற்றுமை வேண்டிய விவேகி !

உத்தமர் காந்தியடிகள் செயல்களை போற்றியதோடு பின்பற்றி வாழ்வோமாக.

ஃ ஃ ஃ

பெண்கள் பகுதி.

வக்கற்ற பெண்ணும் - - வகுப்புரிமையும்.

நம் இந்திய நாட்டின் ஜனத்தொகை சற்றேறக் குறைய 36 கோடி என்று கூறப்படுகிறது. இந்த மொத்த ஜனத்தில் பாதிக்குமேல் பெண்கள் என்று சிலர் கணக்குச் சொல்லுகிறார்கள். எப்படியோ பாதிக்கு சற்று குறைவேயாயினும் எப்படியும் ஒன்றிரண்டு கோடி மக்கள் முன் பின்னிருப்பினும் ஆட்சிபீடமும் மேல் கீழ் சட்டசபைகளும் ஏனைய சர்க்கார் பதவிகளும் நியாயமாய் சமத்துவ நோக்கம் கொண்டவர்களானால் பெண்களுக்கும் பகுதியை ஒதுக்கித்தானிருக்க வேண்டும். அரசியல் ஒருபெரியகுடும்பம் போன்றதுதானே யொழிய வேறல்ல ஆனால் பெண்கள் ஆண்களைப்போல ஆட்சி செய்ய தகுதியற்றவர்கள் என்று ஒதுக்குவதுகூடியவரை நியாயமும் நேர்மையுமற்றதுமாகும் நம்நாடு ஔவைபோன்ற தமிழ் பெண்களை அளித்த நாடுதான். சுருங்கச்சொன்னால் சரஸ்வதியே பெண்ணினம் என்பதை மறந்துவிட்டீர்களோ பொருளாதாரத்துரையில் செய்யும் குடும்பம் பெண்களைப்போல் ஆண்கள் எவ்வாற்றானும் செய்ய இயலாது ஆண்கள் அநேகமாக ஊதாரித்தனமாய் செலவு செய்து பழகியவர்கள் அப்படியே ஆட்சியிலும் செய்துவருவது கண்கூடு. இது இவ்வாறிருக்க குதிரை கீழே தள்ளியதன்றி குழிபறித்ததுபோல் பெண்களுக்கு சிறு உத்தியோக சலுகைமுதல் பெரும் சலுகைவரை அவர்களுக்கு அளிக்காமலிருப்பதோடு நியாயத்துக்குதவாத சட்டங்களும் குறுக்கே இடைமறிக்கிறது.

இந்திய பெண்கள் பெரும்பாலும் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கென்று ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் ஏனைய இந்திய கிறிஸ்தவர்களைப் பார்த்து தாங்களும் ஒருவாறு வேலை ஏதாவது கிடைத்தால் வயிறு வளர்க்க குழந்தைகளைக்காப்பாற்ற நோயுற்ற அல்லது தானும் தன் கணவனும் சம்பாதித்தால்தான் மானத்தோடு வாழமுடியும் என்ற நிலை ஏற்பட்ட குடும்பப் பெண்களும் சமூக கொடுமையால் கணவனிழந்த கன்னிகைகளும் ஏனைய கணவரால் வாழா வெட்டியாக்கப்பட்ட பெண்களும் வேலையிலமர்த்தி ஆவனசெய்யாமல் ஆண்களே எல்லா ஆதிக்கத்தையும் கைப்பற்றிக்கொண்டும் தர்மஆஸ்பத்திரி தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளுக்கு வைத்திய உதவிக்குவேண்டிய பெண்களில்லாமல் ஆண்களே பெண்களுக்கு வைத்தியம் செய்யும்படிக்கும் கஷ்டப்பிரசவம் ஆயுதக்கேஸ் போன்றவைகளுக்கும் ஆண் டாக்டர்களை அனுமதித்துக்கொண்டு அதற்கென வேண்டிய பெண்டாக்டர்களுக்கு படிக்க வசதியளித்து உற்பத்திசெய்ய படிக்கவைக்க மனமோ மார்க்கமோ செய்யாமல் மொத்த ஜனத்தொகையில் பாதியுள்ள பெண்களுக்கு எல்லாவேலைகளையும் 1000த்துக்கு ஒன்று விதம் வேலைகொடுத்துக்கொண்டும் தப்பித்தவறி எந்தப் பெண்ணாவது வேலைபார்க்க எண்ணினால் இந்துப் பெண்கள் துணிந்து வறுமையின் கொடுமையால் வேலைக்குவர ஒப்புக்கொண்டு மனுச்செய்தாலும் புலிப்பால் கொண்டுவந்தால் வேலைஎன்று சொல்லுகிறமாதிரி வேலைக்கு எடுத்துக்கொள்ள வயது 25க்குள் மட்டும் மற்றும் படித்த பள்ளிக்கூட சர்டிபிகேட் ஆஜர்செய்ய வேண்டும்.

படிப்புதேவையற்ற போதிலும் கைஎழுத்துபோட மட்டும் தெரிந்தால் போதுமென இருக்கும் வேலைக்குகூட ரிகார்டுஷீட்டுகளும் சர்ட்டிபிகேட்டுகளும் தேவைஎன்ற நியாயவரம்புக்கு மீறி சட்டங்களைகொண்டுச் சாக்கு சொல்வதும் படித்தப்பள்ளிகூடங்களில் சர்ட்டிபிகேட்டுகளோ ரிகார்டுஷீட்டு ஒருசில வருஷங்களுக்கு மேலில்லாமல் கரையான்பிடித்து செல்லரித்து அழிந்து போகும்நிலையில் அந்தரிக்கார்டுகளை பந்தோபஸ்து செய்துவைக்காமல்விட்டு அதுசர்ட்டுபிகேட் இல்லையேல் வேலைபார்த்தும் சம்பளம் கிடைக்காத நிலையிலிருப்பதும் சர்ட்டிபிகேட்டில்லாவிடில் ஆடிட்டர் அப்ஜக்ஷன் செய்வாராம் ஆடிட் செய்ய வேண்டிய விஷயங்கள் எல்லாம் எவ்வளவோயிருக்க சாதாரணவேலைக்கு வேண்டிய திறைமைதகுதியைக்கொண்டு வேலைகொடுக்காமலிருப்பதோடு அதன்னியில் ஸ்பெஷலாகஆஸ்பத்திரி வைத்து வைத்தியம்செய்துவரும் டாக்டர்கள் பெண்ணுக்கு வைத்தியம்செய்ய பெண்களை அங்குஉதவிக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென சட்டம் செய்தால் பெண்களுக்கு எவ்வளவோ வேலை கொடுக்கலாம். எங்கெங்கு பெண்களின் அவசியமோ அதைவிட்டு வேடிக்கைபோன்ற சிறுபிள்ளை விளையாட்டுத் சனமாய் சர்வீஸ் பஸ்களுக்கு பெண் கண்டக்டர்கள் போடுவது நியாயமானகாரியமா என்பதை சிந்தித்து சட்டங்களை பெண்களுக்குரிய உத்தியோகம் வழங்கும் வகையிலுள்ள முட்டுக்கட்டைகளை எடுத்தெறிந்து நீதியை கடைப்பிடித்தால் சமூகம் முன்னேறும்.

நன்றி.

30—9—50ல் தி ஜி. மாவட்ட கழகத் தலைவர் அவர்களிடம் ஜெயங்கொண்டம் திரு. S. K. B. அவர்கள் முன் கட்டப்பட்ட டிபாசிட்டை கணக்கில் சரிசெய்து கொண்டு ரூ. 20000-கட்டி கட்டிட வேலையைஒப்பிவித்து விடப்பட்டது. தி ஜி போ. திரு. தலைவர், மெம்பர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி கமிட்டி தலைவர், உபதலைவர், மெம்பர்களுக்கும் குறிப்பாக, S. K. B. அவர்களுக்கும் நமது நன்றி

—ஆசிரியர்.

திருத்தம்

இங்ஙனம்
கட்டாயக் கல்வி ஆஜர் கமிட்டியார்
ஜெயங்கொண்டம்

7-ம் பக்கத்தில் 2ம் பத்தியில் "ஆரம்பபாடசாலை ஜெயங்கொண்டம்" என்ற செய்தியின் முடிவில் மேற்கண்ட கையொப்பத்தை சேர்த்து வாசித்துக்கொள்ளவும்.

செய்திகள். ★ ★ ★ ★

ஜெயங்கொண்டம் சென்டர் யார்ன் அட்வைஸ் கமிட்டி.

ஜெயங்கொண்டம்—செப்-29

மாலை ?மணிக்கு யார்ன் அட்வைசர் கமிட்டி, அரியலூர் டெக்ஸ்டைல் கமிட்டி இன்ஸ்பெக்டர் தலைமையில் கூட்டம் துவங்கியது. அதுபோது அடியிற்கண்ட மெம்பர்கள் ஆஜராயிருந்தனர்.

கொ. ரா, வேலாயுதம் முதலியார் (தலைவர்); R. சுந்தரமய்யங்கார்; P. M. பொன்னுசாமி செட்டியார்; A மணி, (முருகவிலாஸ்) J. M; வேலாயுதசாமி செட்டியார், (உதயநத்தம்); P. முருகேச முதலியார் (உ. பாளையம்); நடேசஞ்செட்டியார் (ஆண்டிமடம்); S. சாமிநாத செட்டியார் (வீவர்ஸ் சொசைட்டி தலைவர்); M பஞ்சநத முதலியார் (மேலணிக்குழி)

கூட்டத்தில் செப்டம்பர் மீ நூல் கோட்டா பிரிக்கப் பட்டது.

ந-ஙி

செப்டம்பர் மீ கோட்டா நூல் 20நெ. 40நெ. நெய்பவர்களுக்கு கிட்டத்தட்ட 3 அல்லது 4நாள் வேலையும், 60நெ. to 100நெ. நெய்பவர்களுக்கு 3 அல்லது 4 நாள் வேலைக்குதான் நூல்விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இதுகொண்டு கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்களில் எவ்வாறு இந்த கொடிய விலை உயர்வு பஞ்சகாலத்தில் வாழ்க்கை நடத்த இயலும்? ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதுமான நூல் கிடைக்க முயற்சி செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம், —ஆசிரியர்.

★★★★★★★★ ★★★★★★★★★

வேண்டுகோள்.

மோட்டார் பஸ் சர்வீஸ், லேபர் ஆக்ட்டுகளும் பின்னர் திருத்தவேண்டிய விஷயங்களும் நமது முன்னாள் டிரைவரும், மோட்டார் மெக்கானிக்கும், பொய்யாமொழி வார இதழின் ஆசிரியருமான திரு. M பாஸ்கரனார் அவர்கள் தமது பத்திரிகையில் தொடர்ந்து 18—10—50 முதல் வெளியிடப்போகிறார். ஆகையால் ஆங்காங்குள்ள மோட்டார்த் தொழிலாளிகள் அனைவரும் வாங்கி படித்து உணர்ந்து, தங்கள் தங்கள் கருத்துக்களையும் ஷியாருக்கு எழுதியும், நம் முன்னேற்றத்திற்கு உழைக்கும் பத்திரிகையை ஆதரித்து வரும் செய்திகளைப் பார்த்து நன்மை அடைய கேட்டுக்கொள்ளும்,

S. கிருஷ்ணமூர்த்தி,
டிரைவர், & மோட்டார் மெக்கானிக்,
அரியலூர்.

★★★★★★★★★★★★★★★★★

ஆரம்பப் பாடசாலை
ஜெயங்கொண்டம்.

ஜெயங்கொண்டம் பஞ்சாயத்துபோர்டு எல்லைக்குட்பட்டவர்கள், 6முதல், 14வயதுக்குட்பட்ட தங்கள், ஆண் பெண், குழந்தைகளை பள்ளியில்சேர்த்து ஒழுங்காக பள்ளிக்கு அனுப்பவேணுமாய் கேட்டுக்கொள்ளப் படுகிறது. அவ்வாறு சேர்க்காதவர்கள்மீதும், தற்போது பள்ளியில் படித்துவரும் மாணவ, மாணவிகளை சரிவர பள்ளிக்கு அனுப்பாதவர்கள் மீதும் தக்கநடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

அறிவிப்பு.

விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளிக்காக நிதிகொடுத்தோர்களின் பெயரும், தொகையும் இனி பொய்யாமொழியில், தொடர்ந்து வெளியிடப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஷை கட்டிடநிதிக்கு நன்கொடைஅளிக்க விரும்பும் நண்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்,

முகவரி:—

அ. ரெ. சீனுவாசன், அம்பாப்பூர்,
விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளி கட்டிட கமிட்டி காரியதரிசி
குணமங்கலம் P. O. ஜெயங்கொண்டம் வழி.

நன்கொடையாளர்கள்:

திருவாளர்கள்:	ரூ.	அ.	பை
K M. முத்துலிங்கம், V. M. ஜெமநத்தம்.	100	0	0
V. P. கோபால்சாமி விக்கிரமம்.	50	0	0
P. சாமிநாதபிள்ளை கோமான்.	50	0	0
P. கல்யாணசுந்திரம் திருவைகாவூர்.	25	0	0
A. சாமிநாதன் விக்கிரமங்கலம்.	25	0	0
A. ராஜு போட்டோகிராப்பர் குடந்தை	10	0	0
ஆகமொத்தம்	260	0	0

ஃ ஃ ஃ

—2ம் பக்கத் தொடர்ச்சி—

களைப்போல் பொய்யாமொழியும் இருக்குமென நம்புகிறேன்

திருக்குறளில் வள்ளுவர் வகுத்துள்ள விவசாயம் செய்வதற்கான முறைகளை தெளிவாக உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி தவிக்கும் நம் நாட்டின் மக்களுக்கு எடுத்துரைப்பீர்கள் என நம்புகிறேன்.

பொதுமக்கள்யாவரும் இப்பத்திரிக்கைக்கு ஆதரவு தந்து என்றும் இயற்கையின் இன்னருளால் இந்நிலத்தில் நிலவி விடுவார்கள்என நம்புகிறேன்,

இப்பத்திரிகை தன்னுடைய தொண்டைச் செவ்வனே நடாத்துமேயானால் நாடு நன்றாகும் என்பதில் ஐயமில்லை. ★

திருந்திய மணம்

—:—

14—9—50 ல் மாயனூர் காலஞ்சென்ற M. P. நல்லுசாமி அவர்களின் செல்வி சரோஜாவுக்கும் ஷை தாலூகா பாலராஜபுரம் நிலக்கிழார் திரு வையாபுரி அவர்களின் செல்வன் திரு. ராஜுக்கும் திருந்திய முறையில் திருச்சி ஜில்லா ஷெடியூல்டு காஸ்டு பெடரேஷன் பொதுக்காரியதரிசி டாக்டர் D. T. ராஜன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் திருந்திய மணமும், சிக்கனமும் என்பதுபற்றி நீண்ட சொற்பொழிவாற்றினர்கள். அதனையொட்டி திரு, சண்முகம் B. A., திரு. V. M. பழனிவேல், திரு V ராமசாமி திரு. துரைராஜ்; திரு. நடேசன், திருமதி. நீலாம்பாள் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள் மணமக்களுக்கு பரிசுகளும், வாழ்த்துப்பத்திரங்களும் வாசித்து வழங்கப்பட்டன.

திரு. குமரசாமி நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

ஃ ஃ ஃ

ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்.

கரூர், முசிரி தாலூகாக்கள்போல் மற்றைய இதர தாலூகாக்களிலும் ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் சங்கமிருந்து தள்ளுபடி செய்யப்பட்டதை அங்கீகரித்து அமைத்துக்கொள்ளும்படி எழுத D. B. O. அவர்களிடம் தி. மா. க. தலைவர் 30-9-50ல் சொல்லி வெளியிடும்படி உத்திரவு செய்துள்ளார். எல்லாத் தாலூகாக்களிலும் சங்கம் அமைத்து சங்கத்தின்மூலம் தங்கள் தேவைகளை எடுத்துக்கூற சந்தர்ப்பமளித்துள்ளார் ஆங்காங்குள்ள ஆசிரியர்கள் தருணத்தை இழக்காமல் ஒற்றுமையுடன் சங்கம் நிறுவி நன்மை யெய்துங்கள். —ஆசிரியர்.

கோடிக்கணக்கான மக்களுக்கு

★ ★ **நிவாரணி!** ★ ★

— எவரஸ்ட் —

கஸ்தூரி மெழுகு.

தலைவலி, ஜலதோஷம், ஜுரம், அஜீரணம், பிரசவம், ஜன்னி, வயிற்றுவலி, பித்தமயக்கம் இவைகளை குணப்படுத்துவதில் மிக சிறந்தது!

— எல்லோரும் வாங்கும் எளிய விலை...! —

தயாரிப்பவர்: S. M. K. விஜயபுரம்,

கிடைக்குமிடம்: நெ. 154., விருத்தாசலம் ரோடு ஜெயங்கொண்டம்.

பட்டினி...! பசிக்கொடுமை...!

ஜெயங்கொண்டம் ரேஷன் கடைகளில் 1-10-50 முதல் இவ்வாரம் ஒரு சிலருக்குமட்டும் 3, 4, நாளைக்குதான் கிடைத்து மற்றய பெருவாரி மக்களுக்கு கிடைக்காமல் வெளியிலும் அரிசி கிடைக்காமல் பட்டினிக் கொடுமை தாங்காது தவிக்கின்றனர். —ந-நி.

ஃ ஃ ஃ

உணவுப் பஞ்சம் தீர.

உ, தா. எரவாங்குடி பாப்பாகுடி, வங்குடி கிராம மக்களின் வேண்டுகோள்.

உ. தா, கல்லாத்தூரிலிருந்து ஒரு ஓடை தென் வாரியாக ஓடி வடவாற்றில் கலக்கிறது. ஷை ஓடையில் வரும்நீரை மிளங்குழி என்னும் ஊருக்கருகே மதகுகட்டி நீரைத்தேக்கி நேர்கிழக்கே வாய்க்கால் மூலம் திருப்பி விட்டால் எரவாங்குடியிலுள்ள பெரியேரி, இடையனேரி, சத்திரக்குளம் முதலியஏரிகளில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு பாப்பாகுடி ஏரி வழியே சென்று வெட்டுவாய்க்காலில்போய் கழிவாகும். இவ்விதம் ஓடை நீரை பயன்படுத்தினல் சுமார் 1000 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர்பாய்ந்து நெல் சாகுபடி செய்யலாம். உ. தாலூகாவிலும் உணவுப்பஞ்சம் தீரும். ஆகவே அரசாங்கத்தார் இதில் தீவிர நடவடிக்கை எடுத்து ஷை திட்டத்தைநிறைவேற்றினல் உணவுப்பஞ்சம் இத்தாலூகாவில் நீங்கும் என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம்.
கிராம மக்களின் சார்பில்
M. புண்ணியமூர்த்தி.

பொய்யாமொழி
வார இதழ்
சந்தா விபரம்

ஆண்டு ஆறு மாதம் தனிப்பிரதி
3 0 0 1 12 0 0 0 1 0

கதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள், யாவும் கற்பனையேயன்றி யாரையும் குறிப்பிடுவன அல்ல.

கட்டுரையாளருக்கு

கதை, கட்டுரை எழுதி அனுப்புவர்கள் தங்கள் விலாசங்களை தெளிவாக எழுதவேண்டும். திருப்பிப்பெற விரும்புவோர் போதிய தபால் — பில்லைகள் அனுப்பவேண்டும். —

—ஆசிரியர்.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press. (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketchari Street, Jayankondacholapuram.